


அமரர்

திரு. தாமோதரம்பிள்ளை விஜயநாதன்

அவர்களின்

# அமரத்துவ நினைவுச் சுடர்

01.06.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

சைவமும் தமிழும்
வையகம் வாழும் ஆங்கிலமும்
சீரான நற்கல்வி வாழ்வும்
பேரான பொதுநல சேவையும்
தாளாத மனவுறுதி பண்பும்
மேலான புன்சிரிநகையுமாய்
இவ்வுலகு வாழ்ந்து சிறந்து
அவ்வுலகு சென்ற சீமான்

**அமரர்**

**திரு தாமோதரம்பிள்ளை விஜயநாதன்**


**நினைவாய்**

இவ் அமரத்துவ நினைவு சுடரினை
நாமாக மனமுவந்து ஏற்றுகின்றோம்.
சமர்ப்பணமாய் தங்க சமாது
விநாயகர் பாதமடிக்கே

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்.

# திரு.தாமோதரம்பிள்ளை விஜயநாதன்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 31-08-1931 | 02-05-2009 |

## திதி வெண்பா

"சீர் பெருகும் விரோதி வருஷ சித்திரையில்
தீராத ஆயிலிய பூர்வ பட்சத்தில் – பேர்
பெற்ற சீமான் விஜயநாதன் கணபதியடி
உற்றவருங் கலங்க ஏகினார் காண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் வணக்கம்

பவனமால் வரையில் நிலவெறிப்பது போல்
பரந்த நீற்றழகு பச்சுடம்பில்
திவளமாதுடன் நின்றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப் பொன்றொடித் தொழு கரத்தில்
தரித்துயர் திரிப்புறத்து எழுதுங்
களமர் களிற்றின் திருமுகம் படைத்த
கடவுளை நினைத்து கைதொழுவோம்

# பஞ்சபுராணம்

## தேவாரம்

திருநாம பஞ்செழுத்துஞ் செப்பராகிற்
தீவண்ணர் திறமொருகாற் பேசாராகில்
ஒரு காலுந் திருக்கோயில் சூழா ராகி
லுண்பதன் முன் மலர் பறித்திட் டுண்ணா ராகில்
அரு நோய்கள் கெட வெண்ணீ றணியா ராகி
லளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகருலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே.

## திருவாசகம்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென் றவரவரைக் கூட்தாட்டு
வானாகி நின்றாயே என் சொல்லி வாழ்த்துவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப் போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணீராச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்? கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெருத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுருலகனில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறிவும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

பரந்தெழுத சமண் முதலாம்
பரசமய இருள் நீங்க
சிரந்தெழுவு சைவநெறி
திருநீற்றின் ஒளி விளங்க
வரந்தை கெட புகலியர் கோன்
அழுது செய்த
திருமுலைப்பால் சுரந்தளித்த
சிவகாமசுந்தரி தன் பூங்கழல் போற்றி

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாளொனைப் பெருவாழ்வில்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிச் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநி பாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவார்
சிவசிவ என்ன சிவகதி தானே

***************

# திருவாசகம்



தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பொய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருன்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி
சீரார் பெருந்துறை நந் தேவனடி போற்றி

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன் யான்

கண்ணுதலான் தன் கருணை கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொழியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே யுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்



தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

ராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரா யுருக்கி யென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே

அன்பருக்குக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே யென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவிஅறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த மேலீடு (வள்ளலார்)



கையற விலாது நடுக் கண்புருவப் பூட்டு
கண்டு களி கொண்டு திறந் துண்டு நடு நாட்டு
ஐவர் மிக வுய்யும் வகை யப்பர் விளையாட்டு
ஆடுவதென்தே மறைகள் பாடவது பாட்டு

ஈசனருளால் கடலில் ஏற்றதொரு வோடம்
ஏறிக்கரை யேறினே னிருந்த தொரு மாடம்
தேசுறுமம் மாட நடு தெய்வ மணிப் பீடம்
தீபவொளி கண்டவுடன் சேர்ந்தது சந்தோடம்

துரியமலை மேலுள தோர் ஜோதி வள நாடு
தோன்று மதில் ஐயர் நடஞ் செய்யுமணி வீடு
தெரியுமது கண்டவர்கள் காணிலுயிரோடு
செத்தாரெழு வாரென்று கைதாளம் போடு

சிற்பொதுவும் பொற் பொதுவும் நான் அறியலாச்சு
சித்தர்களும் முத்தர்களும் பேசுவதென் பேச்சு
இப்பெரிய இவ்வுலகில் என்ன இனி ஏச்சு
என் பிறவித் துன்ப மெல்லாம் இன்றோடு போச்சு

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *


உ

## அந்தியேட்டி கிரியை அழைப்பிதழ்



அன்புடையீர்!
திரு /திருமதி / செல்வி..........................................................

2009.05.02ஆம் திகதி சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர் தாமோதரம்பிள்ளை விஜயநாதன் அவர்களின்**

அந்தியேட்டி கிரியைகள் 2009.06.01ஆம் திகதி திங்கட்கிழமை காலை 08.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரினது ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து கஸ்கிசன் வீதியில் அமைந்துள்ள சுபமங்களா மண்டபத்தில் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 19, சமாது ஒழுங்கை,
திருக்கோணமலை.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருட்பா இராமலிங்க அடிகள்

(1) தன்னை யறிம் தின்பமுற வெண்ணிலாவே – ஒரு
தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே
(2) நாதர் முடி மேலிருக்கும் வெண்ணிலாவே – அங்கே
நானும் வர வேண்டுகிறேன் வெண்ணிலாவே
(3) சச்சிதானந்தக் கடலில் வெண்ணிலாவே – நானும்
தாழ்ந்து விழ வேண்டுகிறேன் வெண்ணிலாவே
(4) இராப் பகலில் லாவிடத்து வெண்ணிலாவே – நானும்
இருக்க வெண்ணி வாடுகின்றேன் வெண்ணிலாவே
(5) ஆதி அந்த மென்றுரைத்தார் வெண்ணிலாவே – அந்த
ஆதி அந்த மாவதென்ன வெண்ணிலாவே
(6) நானதுவாய் நிற்கும் வண்ணம் வெண்ணிலாவே – ஒரு
ஞான நெறி சொல்லு கண்டாய் வெண்ணிலாவே
(7) வாசி வாசி யென்றுரைத்தார் வெண்ணிலாவே – அந்த
வாசியென்ன பேசு கண்டாய் வெண்ணிலாவே
(8) அம்பலத்தி லாடுகின்றார் வெண்ணிலாவே – என்னை
ஆட்டுகின்றார் இம்பரத்தே வெண்ணிலாவே

# பட்டினத்தார் பாடல்

வீடு நமக்கு திருவாலங்
காடு விமலர் தந்த
ஓடு நமக்குண்டு வற்றாத
பாத்திரம் ஓங்கு செல்ல
நாடு நமக்குண்டு கேட்ட தெல்
லாம் தர நல் நெஞ்சமே
ஈடு நமக்குச் சொலவோ
ஒருவருக்கும் இங்கில்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சரித்திரத்தை நோக்கி....



இயற்கை எழில் மிஞ்சும்
சம்பந்தர் திருப்பதிகம்
பாடிய திருக்கோணேசர்
அமர்ந்திருந்து அருள்
ஆட்சி புரிகின்ற
தமிழும் சைவமும்
வாழும் திருக்கோணமலை
பிறந்த மண்ணாம்

ஆயிரத்து தொளாயிரத்து
முப்பத்தியோராம் ஆண்டினில்
ஆவணி முப்பத்தொன்றில்
அருளாளர் குடிதனில்
தாமோதரம்பிள்ளை துணையாள்
பகவதிப்பிள்ளை பந்தத்தில்
மூன்றாவது செல்வ மகனாக
வந்தாரே தவழ்ந்தாரே

'பெரிய தம்பி' அன்பு
செல்லப் பெயராம்
பவானி அம்மா விஜயராணி
விஜயலக்சுமி விமலநாதன்
விஜயசௌந்தரி விஜயேஸ்வரி
பாசமிக அன்பு சகோதரங்களாம்

தவழ்ந்து மண்ணில் எழுந்து
விழுந்து நடைவண்டி
பிடித்து மண் வானம்
பார்த்து உறவுகள் முகம் தேடி
மழலை மொழி பேசி
வளர்ந்தாராம் சிறந்து.

திருக்கோணமலை பெருந்தெரு
விக்னேஸ்வர வித்தியாலயம்
ஆரம்ப கல்வியைத் தந்திட
இடைநிலைக் கல்வியினை
மட்டுநகர் சென்மைக்கல்
கல்லூரியில் பயின்று
திருமலை இந்துக் கல்லூரியில்
உயர்தரக் கல்வியினை முடித்தாரே

நீர்ப்பாசன இலாகாவினில்
மேற்பார்வையாளராக பதவி
ஆயிரத்தி தொளாயிரத்து ஐம்பத்
தொன்றில் தேடி வந்திட
கந்தளாய் பதவியா
மூதூர் பன்குளம் என
தன் கடமைகளை சிறப்புற
செய்து மகிழ்ந்திருந்தாரே

வாலிபமும் கூடி வந்திட
துணையாக லிங்கேஸ்வரி
வந்து கரமது பற்றிட
ஆயிரத்து தொளாயிரத்து
அறுபத்து நான்கினில்
வாழ்வு தேரும் இழுபட்டதே

திருமணமெனும் பந்தத்தின்
சாட்சிகளாக கௌரிதரன்
ஹேமாங்கதன் விஜயகுமார்
மோகனப்பிரியா நான்கு
நல்முத்துகள் விளைந்தனவே

சொல் கேட்ட பிள்ளையாக
சகோதர பாசமிகு பிறப்பாக
கடமையே தன் கண்ணென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் வேளை பார்க்காது
செய்வனே செய்து
அக்கம் பக்கம் வாழ்
குடிமக்கள் நன்மை
தீமை எதிலும் சேவை
தனையே மூலமந்திர மாக்கி
மானுட நேயமுடன்
வாழ்ந்திருந்தாரே மகிழ்ந்து.

தம் மக்களுக்கு நற்கல்வி
தந்து நேர்மை பொறுமை
எனும் நற்பண்புகள் ஊட்டி
பல்கலைக்கழகம் சென்றிட
துணையானாரே சிறந்து.

மக்கள் மூவருக்கும் நற்
துணைதேடி திருமணப்
பந்தத்தில் புகுத்தியே
சதுவர்த்தன் தனுவர்த்தன்
ஹரிஷ்சாயி கீர்த்திக்
அபர்ணா அபரதன்
அவர்நயா வெனும்
செல்வ பேர மாணிக்கங்களை
அள்ளி அணைத்து
பேரனும் ஆனாரே

சுவீடனில் மக்களுடன்
இரண்டு வருடங்கள்
வாழ்ந்து அனுபவித்து
தனது ஐம்பந்தைந்தாவது
வயதினில் சேவையில்
இருந்து ஓய்வு பெற்றாரே

இந்து இளைஞர் மன்றம்
Rotary Club போன்ற
தொண்டு நிறுவனங்களில்
தன் சேவையினை இணைத்து
மக்களுக்கு அன்புள்ள வராகி
பாசமிக மானுட சுடரும்
ஆனாரே பண்பாளருமானாரே

சமாது தங்க விநாயகர்
திருவடி நாளாந்தம் தொழுது
விஸ்வநாத சிவன் ஆலயத்தில்
திருத்தொண்டு பல செய்து
எல்லா ஆலயங்களுக்கும்
அதிகாலை பூத்தொண்டு
செய்து மனதை மகிழ்வித்து
பெருந் தொண்டாற்றினாரே

ஆங்கில சிங்களமொழி
வளத்தினில் சிறந்து சமூக
பணிதனில் தன்னை உட்
படுத்தி மக்கள் சேவையே
மகேசன் சேவையென
உழைத்தாரே ஓடி மகிழ்ந்து

நாளும் வந்ததோ
மரணத்தினுள் உள்ள
வாழ்வு அழைத்ததோ
பயணதிகதியும் வந்ததோ
உயிரும் உடலை விட்டு
பிரிந்ததோ மகிழ்ந்து

மோட்ச சிம்மாசனமும்
தங்க விநாயகன் திருபாத
மடியும் அடைக்கலம்
தந்ததோ கலங்கி ஏங்கி
நாம் அழுதிட நினைப்பும்
பெருகிடுமோ இன்று.

**- குடும்பத்தினர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்தென்று ஒரு நாளும்....



ஓயாது ஓடிஓடி உதவிசெய்வான்
ஒரேயினிய அண்ணனாக எமக்கிருந்தான்
வருத்தமென்று ஒருநாளும் படுத்ததில்லை
மருந்தென்று ஒருநாள் எடுத்ததில்லை
தன்னையுருக்கி ஒளிகொடுக்கும் மெழுகினைப்போல்
ஊர் முழுதும் தொண்டுசெய்து இன்பங்கண்டான்
ஓய்ந்தது அவனோட்டம் இவ்வுலகில்
ஓயவில்லை எனதுள்ளம் அவன் பிரிவால்.

– சகோதரி, விஜயலக்சுமி –

# ஆற்றுவார் யார் என்னை....

நாமிருவர் நமக்கைவர் என்றெண்ணி
சகோதரிகள் ஐவருடன் மகிழ்ந்திருந்தோம்
அழகிய ஐவரில் மூவரை இழந்து
ஆறாத்துயரில் மூழ்கி நின்றோம்
நீயும் இன்றென்னை ஒருமையாக்கி
மீண்டும் துயரில் மூழ்கவைத்தாய்
ஆற்றுவார் யார் என்னை இந்நிலையில்
தேற்றுவார் எவர் என் கவலையினை

– சகோதரன் : விமலநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுமே சொல்லாமல்....



அன்றுமுதல் இன்றுவரை என்றுமென்மேல்
நன்றாகப் பரிவுகாட்டிப் பாசம்வைத்தாய்
ஒன்றுமே சொல்லாமல் எம்மைவிட்டு
சென்றுவிட எப்படித்தான் நீதுணிந்தாய்
ஒன்றுமறியேன் உனைநினைந்து அழுவதன்றி
என்று காண்பேன் அன்புமிக்க உன்முகத்தை

– சகோதரி : விஜயேஸ்வரி–

# இப்பவே செய்யலாம் என்று....

அப்பா அப்பா என்று கதறி அழுத மோகனா
மச்சாளின் குரல் எங்கள் இதயங்களில் இன்னும் ரணமாய்
வலிக்கிறது மாமா!
திருமலை வந்தால் வரவேற்பவரும் நீங்கள் தான்
வழி அனுப்பிவைப்பவரும் நீங்கள் தான் இனி
ஒரு பெரியதம்பி மாமா உங்கள் போல் யார் உண்டு இங்கு
மீண்டும் மீண்டும் என்று கேட்டு நிற்கும் திருமுகம் எங்கே மாமா!
வேலையில் இருந்து ஓய்வு பெற்றாலும் மற்றவர்களுக்காக
ஓய்வு பெறாமல் செய்த உதவிகள் தான் எத்தனை
எத்தனை மாமா!
எது சொன்னாலும் ஒரு புன்முறுவலுடன் உடனே செய்யலாம்
இப்பவே செய்யலாம் என்று நிற்கும் உங்கள் செயல் தான்
எங்கே மாமா!
மாமா என்றால் என்ன அர்த்தம் என்பதை உங்களின் மறவாத
அன்பும் மாற்றமில்லா பாசமும் மனம் நெகிழும் நேசமும் சொல்லித்
தந்ததே மாமா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் எங்கள் இதயங்களில் வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள்
மாமா!
அள்ளி அணைத்து முத்தம் ஒன்றை பெருமையுடன்
பெற்றுக் கொண்டு தேவைகளை பெற்றுக் கொடுக்கும்
எங்கள் பெரியதம்பி அப்பப்பா எங்கே?

**- சகோதரிகளின்-மக்கள்-மருமக்கள்-பேரப்பிள்ளைகள்**

# பெரியப்பா என்றொரு பெருமனிதர்.....

பெரியப்பா என்றொரு பெருமனிதர்
பெருந்தன்மையாய் வாழ்ந்த மாமனிதர்
அரும்பிடும் புன்னகை அவர் முகத்தில் - பிறர்க்கு
உதவிடும் எண்ணமே அவர் அகத்தில்



பெரியவர் சிறியவர் பேதமில்லை
உரியவர் உடையவர் பிரிவுமில்லை
அறிந்தவர் யாவரும் நட்புடனே
தெரிந்திட வாழ்ந்த திருமகனாம்

பக்தி வழிதனில் அவர் நடந்தார்
மற்றவர்க்கென்றே வாழ்ந்து வந்தார்
இருக்கையில் இயற்றிய தவமதனாலே
படுக்கையில் இன்றி சிவனடியடைந்தார்

பெரியப்பா என்றொரு பெருமனிதர்
பெரும் அன்புடன் அரவணைத்த அருமனிதர்
பிரிவின் துயரிலும் அவர் வாழ்வெண்ணி
பெருமிதம் அடைகின்றோம் பெறாமக்கள்.

**-பெறா மக்கள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புன்னகையால் ஈந்து.....

பொங்கு தனக்கரத்தாள் வாழ்வு கரம்பற்றி
தங்கும் நலம் விழங்க புன்னகையால் ஈந்து
எங்கும் நலம் தருகின்ற தங்க குழந்தைகள் மடிதந்து
இங்கு நான் கதற எங்கு தான் போனீரோ ஐயா.

-அன்பு மனைவி-

## வாழ்வு வழி...

சோதியில் கலந்திரோ சொர்க்கத்துக்கு போனீரோ
தாதிபோலெம்மை மார்பணைத்து அமுதூட்டி மகிழ்ந்தீரே
ஆதியினும் ஆதியனே நற்கல்வி வாழ்வும் தந்தவரே
போதி மாதவனாய் வாழ்ந்து வாழ்வு வழி சொன்னவரே
பாதி வாழ்வில் நாமும் உமை இழந்து பரிதவிக்கின்றோமே

-பாசமிகு மக்கள் -

## எந்தன் நினைவும்...

மாமாவெனும் பாசமலையாய் வாய்த்தவரே
சாமியுனை அழைத்துமோ போனிரோ
உந்தன் முகம் இன்றும் எம் நெஞ்சினில் உண்மை
எந்தன் நினைவும் என்றும் உம்மோடு தான்

-பிரிய மருமக்கள்-

## காலாட்டி கதைசொல்லி...

காலநீட்டி அதில் வளர்த்தி
காலாட்டிபாட்டி கதை சொல்லி
கணீரென பாட்டுப்பாடி - தங்க
சமாது பிள்ளையார் கோவிலுக்கு
தூக்கிச் சென்று ஊர் காட்டி
உத்தமர் காட்டிய அன்பு தாத்தா - உமை
காணாது தவிக்கின்றோம் வாருமே!



-செல்ல பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியவரே...............

மானிடப்பிறவியிலே பலர் பிறந்து, இவ்வையத்திலே வாழ்ந்து இறந்து விடுகின்றனர். இவர்களில் ஒரு சிலரின் நினைவுகள் மட்டுமே அவர்கள் மறைந்தாலும் மக்களின் மனதில் நீங்காத நினைவாக என்றும் நிலைத்து நிற்கிறது. ஏனெனில் அவர்களின் மறைவின் பின்பும் அவர்கள் செய்த நற்காரியங்கள், நற்சிந்தனைகள் என்றும் எம்மனதை விட்டு அகலாதவையாக இருந்துவிடுகின்றன.

இந்த வகையில் அமரர். திரு. விஜயநாதன் அவர்கள் இவ்வையத்தை விட்டு நீங்கிய போதும் எமது எண்ணக் கனவுகளில் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார் என்றால் அது மிகையாகாது. எனது வாழ்வில் நான்கண்ட பல மனிதர்களில் இவர் தன்னலம் கருதாது மற்றவர்களின் நலன் கருதி வாழ்ந்து வந்தவர்.

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்கின்ற வள்ளுவரின் வார்த்தைகளுக்கு உயிரோட்டம் கொடுத்தவர் அமரர் திரு. விஜயநாதன் அவர்களாவர்.

அமரர் அவர்கள் தனது குடும்பத்தில் வாழ்ந்த வாழ்க்கை மற்றவர்களுக்கெல்லாம் ஓர் எடுத்துக் காட்டு. இவரது பிள்ளைகள் எல்லோரையும் ஓர் உன்னத நிலைக்கு ஏற்றிவைத்து நிறைவான வாழ்வை அவர்களுக்குக் கொடுத்து அவர்களை தன்னிறைவான நிலைக்கு ஆளாக்கிய பெருமை அவரையே சாரும்.

"தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி இருப்பச் செயல்

என்கின்ற வள்ளுவனின் வாக்கு இவருக்கே பொருத்தமானதாகும். அதாவது தனது மக்களை அவையத்தில் முந்தியிருக்கச் செய்தது அன்னார் ஆற்றிய மேலான கடமையாகும். அமரர் அவர்கள் தனது பிள்ளைகள் மீது மிகுந்த பாசம் கொண்டவராக, தனது மனைவி மீது மிகுந்த பிரியம் கொண்டவராக வாழ்ந்தவர். அமரர் அவர்களின் ஏனைய நற்குணங்களை பின்வருமாறு பல கோணங்களில் நாம் சிந்தித்து பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இறைவனிடத்தில் மிகுந்த பக்தி கொண்டவர்.
2. மற்றவர்கள் உதவிக்கேட்டு வருமுன்னரே அவர்களின் தேவைகளை கேட்டறிந்து உதவுபவர்.
3. ஏழைகளிடம் மிகுந்த பிரியம் கொண்டவர்.
4. தன்னைத்தேடி வருபவர்களை ஆதரிப்பவர்.
5. சமூகத் தொண்டே தனது குறிக்கோளாகாக் கொண்டவர்.
6. எல்லோரிடத்திலும் மிகுந்த அன்புள்ளம் கொண்டவர்.
7. கடமையே கண்ணாயிருப்பவர்.
8. உறவினர்கள் எல்லோரையும் ஆதரிப்பவர்.
9. என்றும் இனிய வார்த்தைகளையே பேசுபவர்.
10. தகுந்த நேரமறிந்து விரைவுடன் செயற்பட்டு காரியமாற்றுபவர்.



இவ்வாறான சிறந்த நற்குணங்களை தன்னகத்தே கொண்டு வாழ்ந்த ஒரு மாமனிதர் இன்று எம்மிடம் இல்லையே என்கின்ற பொழுது எமது இதயமெல்லாம் கனக்கிறது. அமரர் அவர்களிடம் நான் கொண்ட ஈடுபாடானது ஒரு உறவினர் என்பதனை விட, நண்பன் என்பதைவிட, மேலானது.

அவ்வப்போது எனக்கும், எனது குடும்பத்துக்கும் ஏன் எமது அயலவர்களுக்கும் புத்திமதிகளைக் கூறி எங்களையெல்லாம் வழிகாட்டுவார். இன்று அவ் இனியவர் எம்மிடம் இல்லையே என்பதை நினைக்கையில் ஆற்றொணாத் துயரம் எம் எல்லோரையும் வாட்டுகிறது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வாக்குக்கு அமைய அவர் வாழ்ந்த போதும், அமரத்துவம் அடைந்த போதும் அமரரின் எண்ணம் எம்மை விட்டு அகலா என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எனது சார்பிலும் எனது குடும்பத்தவர் சார்பிலும் எல்லாம்வல்ல சமாது தங்க விநாயகரை இரஞ்சி வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி

**இ. உமாகாந்தன்**
பிரதிப்பிரதம செயலாளர் – திட்டமிடல்
வடமாகாணம்

**15, சமாது ஒழுங்கை,**
**திருகோணமலை,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ප්‍රධාන ලේකම් කාර්යාලය, නැගෙනහිර පළාත
தலைமைச் செயலாளர் செயலகம், கிழக்கு மாகாணம்
**Secretariat of the Chief Secretary, Eastern Province**

Web Site : www.nepc.lk

අංක. 198, ඇතුල්වරාය පාර, ත්‍රිකුණාමලය, ශ්‍රී ලංකාව.
இல. 198, உட்துறைமுக வீதி, திருகோணமலை, இலங்கை.
No. 198, Inner Harbour Road, Trincomalee, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office } 026-2223915-20
ෆැක්ස් / தொலை நகல் / Fax } 026-2220000
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail } epcs@sltnet.lk

මගේ අංකය / எனது இல / My No }
ඔබේ අංකය / உமது இல / Your No }
දිනය / திகதி / Date }

# மறக்க முடியாதவர்.

அமரர் விஜயநாதன் அவர்கள் நீண்ட காலமாக பழகிய பரீட்சயமானவர். எப்போதும் சுறுசுறுப்பையும், உயர்ந்த பண்புகளைப் பிரதிபலித்து நிற்கின்ற நடத்தையையும் அவர் கொண்டிருந்தார். அன்புடன் எல்லோரையும் அரவணைப்பதுடன், தான் பழகுபவர்களின் குணாம்சங்களை மெச்சிப் பேசுகின்ற தன்மையும் அவருடன் கூடப்பிறந்த சிறந்த குணமாகும். யார் எந்த உதவி கேட்டாலும் முகம் கோணாது. சிரமம் பாராது "பரக்க பரக்க" சைக்கிளில் ஓடி ஓடிச் செயல்படுவதை அவதானித்திருக்கின்றோம். தனது உடல் நிலை பற்றி அலட்டிக்கொள்வதில்லை. இறைவழிபாட்டில் அக்கறையுள்ளவர். மிகவும் எளிமையாக வாழ்ந்தவர். அவரது நல்ல மனசுக்கேற்ப அவருடைய பிள்ளைகள் நிறைவாக வாழ்கின்றனர். எம் வாழ்க்கையில் மறக்க முடியாத உறவினராக அவர் என்றென்றும் நினைவில் நிலைத்து நிற்பார். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வே. பொ. பாலசிங்கம்,**
**பிரதம செயலாளர்,**
**கிழக்கு மாகாணம்**

Chief Secretary - 026-2222012
Co-ordg. Secretary - 026-2227160
Administrative Officer - 026-2222035

Deputy Chief Secretary (Finance) 026-2222880
Deputy Chief Secretary (Planning) 026-2224013
Deputy Chief Secretary (Engineering Service) 026-2222509



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்களும் அனுட்டான நியமங்களும்

விரதம் என்றால் ஐம்புலனடக்கம் என்பது பொருள். அதாவது சித்தத்தை ஒருமுகப்படுத்துதல், மனமானது பொறிவழிச் செல்லாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் திரிகரண சுத்தியுடன் இறைவனைச் சிறப்பாக வழிபடுதல்.

விரதம் அனுட்டிப்பவர் விரதகாலங்களில் தாம்பூலந்தரித்தல், புகைப்பிடித்தல், பகலில் நித்திரை செய்தல், சிற்றின்பம் துய்த்தல் முதலியன செய்தலால் பிராயச்சித்தமற்ற பாவ தண்டனைகளுக்குள்ளாக் கப்படுவர்.

விரதங்கள் மனிதனுடைய வாழ்வை மேன்மையுறச் செய்து நன்மை நோக்கி இட்டுச் செல்கின்றன. விரதங்கள் உணவு உட்கொள்வதில் பலவகையாக உள்ளன. அவை,

1. யாசிதம் - இருபகல் உணவு உண்டிருத்தல்
2. பாதக்கிரிச்சனம் - நல் உணவு உண்டிருத்தல்
3. பன்னக்கிரிச்சனம் - அரசு, அத்திரி, வில்வம் இவைகளின் தளிர்களில் ஒன்றை நிரில் தோய்த்து உட்கொண்டிருத்தல்.
4. சௌமியக்கிரிச்சனம் - ஒரு பகல் பால், மோர், நீர், பொரிமா ஆகியவற்றில் ஒன்றை உட்கொண்டிருத்தல்
5. அதிகரிச்சனம் - மூன்று நாள் ஒவ்வொரு பிடி அன்னம் உண்டும் அது இல்லாமலும் இருத்தல்.
6. கிரிச்சனாதி கிரிச்சனம்- இருபத்தியொரு நாள் பால் மட்டும் உண்டிருத்தல்.
7. பிரசாபத்திய கிரிச்சனம்- மூன்று நாளில் காலை. மூன்று நாள் மாலை மூன்று நாள் இடைவேளை, மூன்று நாள் உணவின்றியும் இருத்தல்.
8. பார்க்ககிரிச்சனம் - பன்னிரண்டு நாள் உணவின்றி இருத்தல்.
9. சாந்தாபன கிரிச்சானம்- ஒரு நாள் கோசலம், ஒருநாள் கோமயம், ஒரு நாள் பால், ஒரு நாள் தருப்பை நீர், ஒரு நாள் உணவு உட்கொண்டிருத்தல்.
10. மகாசந்தாபன கிரிச்சனம்- மேற் கூறப்பட்டவைகளில் ஒன்றைக் கடைப்பிடித்தல்.
11. சாந்திராயணம் - வளர்பிறை முதலாக ஒவ்வொரு பிடி உணவு கூட்டித் தேய்பிறை முதலாக ஒவ்வொரு பிடி உணவு குறைத்து உண்கொண்டு மூன்று வேளையும் ஸ்நானம் செய்தல்.
12. வால சாந்திராயணம் - சாந்திராயணத்தின் இரவு வேளையில் மட்டும் நான்கு பிடி உணவு உட்கொள்ளுதல், என்பவாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரை

### சித்திரா பூரணை

வருடம் பிறந்து முதலாவதாக வரும் பூரணை என்பதோடு எமது தலை விதியை நிர்ணயிக்கும் எமது வாழ்நாள் கணக்குகளை எழுதிப் பேணும் யமதர்மராஜனின் கணக்குப் பிள்ளையாகிய சித்திரகுப்தர் திருவவதாரம் செய்த நாளுமாகும்.

தமது தாயை இழந்தவர்கள் இத்தினத்தில் தாயை நினைத்து விரதமனுட்டித்துப் பிரார்த்தனை செய்வதால் அன்னாரின் ஆன்மா சாந்தி பெறுகின்றது அன்று உப்பைத் தவிர்த்து பசும்பால், தயிர் உண்ணாமல் இருத்தல் சிறப்பு இதனால் பாவச்சுமை குறையும்.

### சித்திரைத் திருவோணம்

ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு வருடத்தில் செய்யப்படும் ஆறு அபிஷேகங்களில் வருடம் பிறந்து முதல் வருகின்ற அபிஷேகம் சித்திரைத் திருவோனத்தில் நிகழ்கின்றபடியால் இத்தினம் வழிபாட்டிற்குரிய முக்கிய தினமாகும்.

## வைகாசி

### வைகாசி விசாகம்

அசுரர்களை அழித்தொழித்துத் தேவர்களைக் காத்தருளியதன் மூலம் அதர்மத்தை ஒழித்துத் தர்மத்தை நிலை நாட்டியது மட்டுமன்றி முழு உலகமுமே உய்வடையும் பொருட்டுச் சரவணப் பொய்கையில் முருகப் பெருமான் திருவவதாரம் செய்த தினமாகையால் முருக வழிபாட்டிற்குச் சிறந்த தினமாகும்.

## ஆனி

### ஆனி உத்தரம்

எமது இறைவனாகிய சிவபெருமான் நடராஜர் என்ற நாமத்தில் தனது அடியார்களுக்காகத் தில்லையில் திருநடனம் புரிந்தது இத்தினத்திலாகும். தனது திருநடனத்தின் மூலம் எம்பெருமான் பஞ்சகிருத்தியங்களையும் புரிகிறார். இத்தினம் நடராஜர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆடி -**

## ஆடிச் செவ்வாய்

இத்தினம் அம்பாள் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும். விவாகமாகாத கன்னிப் பெண்கள் இத்தினத்தில் விரதமிருந்து அம்பாள் தரிசனத்தில் ஈடுபடுவதன் மூலம் மாங்கலியப் பாக்கியம் கிடைக்கப் பெறுவர். செவ்வாய் தோஷமுள்ளவர்களும் ஏனையோரும் செவ்வாய்க்கிழமை விரதத்தை ஆடிச்செவ்வாயன்று கோவிலில் சங்கற்பம் செய்து ஆரம்பிப்பது உத்தமமானது. ஒரு பொழுது அன்னமோ, பால், பழமோ உண்டு. இவ்விரதத்தைக் கைக்கொள்ளலாம்.

## ஆடி அமாவாசை

இத்தினம் பிதிர்க்கடன் செய்வதற்குச் சிறந்த நாளாகும். தந்தையை இழந்தவர்கள் இத்தினத்தில் விரதமிருந்து வழிபாட்டிலீடுபட்டுத் தானங்கள் செய்வதால் பிரிந்த ஆன்மாக்கள் ஈடேற்றம் அடைகின்றன.

## ஆடிப்பூரம்

உலக மாதாவாகிய உமாதேவியார் ருதுவாகிய தினமான இத்தினம் அம்பாள் விரதத்திற்கும் தரிசனத்திற்கும் உகந்தநாளாகும். அம்பாளின் எட்டு வகைச் சித்திகளையும் பெற இந்நாள் வழிபாடு உன்னதமானது.

**ஆவணி -**

## ஆவணிச் சதுர்த்தி (ஆவணி மாதம் வளர்பிறை 4ம் நாள்)

ஆவணி மாதத்துப் பூர்வ பக்கச் சதுர்த்தி விநாயகப் பெருமான் திருவதாரம் செய்த தினமாகையால் விநாயக விரதத்திற்கும் வழிபாட்டிற்கும் சிறந்த நாளாகும்.

## விநாயக சதுர்த்தி விரதம்

மாதந்தோறும் வரும் வளர்பிறைச் சதுர்த்தித் திதி விநாயகர் விரதத்திற்குச் சிறந்த நாளாகும். ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியில் அனுட்டிக்கப்படும் விநாயக சதுர்த்தி விரதம், மற்றும் விரத பலனிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கக் கூடுதலான பலனை நல்கும் எனச் சமய நூல்கள் சாற்றுகின்றன. அந்நாளில் இளம்பிறைச் சந்திரனைப் பார்த்தலாகாது. பகலில் உபவாசம் இருந்து ஆலய தரிசனம் செய்த பின், இரவில் கொழுக்கட்டை மோதகம் முதலியன விநாயகருக்கு நிவேதித்து உண்ணலாம். அந்நோன்பு நோற்பவர் விநாயகரை அறுகம் புல்லால் அர்ச்சிப்பது அளவிறந்த பலனைக் கொடுக்கும். இத்தினத்தில் விரதம் அனுட்டித்து உள்ளன்போடு வழிபடுவோர்க்கு விநாயகர் திருவருள் கடாட்சம் கிடைக்கும் என்பது உறுதி. அதுபோல் தேய்பிறையில் வரும் சதுர்த்தியைச் சங்கடகர சதுர்த்தி என அழைத்து விரதமிருப்பர்.

## ஆவணிச் சதுர்த்தசி

ஸ்ரீ நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகங்களில் இத்தினத்தில் நடைபெறும் அபிஷேகமும் ஒன்றாகையால் இத்தினம் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்ததாகும்.

## ஆவணி மூலம்

மாணிக்கவாசக சுவாமிகளுக்காக சுந்தரேஸ்வரப் பெருமான் மதுரைமாநகருக்கு எழுந்தருளி அருள் பாலித்த தினம் இதுவாகும். அதாவது மாணிக்க வாசக சுவாமிகளைப் பாண்டிய மன்னன் சிறையிலிட்டுத் தண்டனை விதித்த சமயம் சுவாமியவர்களை விடுவிப்பதற்காகச் சிவபெருமான் காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டு வந்து அவரைச் சிறையினின்றும் மீட்டது ஆவணி மாத மூல நட்சத்திரத் தினமாகும். இதன் காரணமாக இத்தினம் பிட்டுக்கு மண் சுமந்த விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

## ஆவணி ஞாயிறு

எல்லா மாதங்களிலும் ஞாயிறு வருகின்ற போதிலும் ஆவணி மாதத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை சூரிய விரதத்திற்கும் வழிபாட்டிற்கும் சிறந்ததாகும். இம்மாத்தில் சூரிய பகவான் சிங்கராசியில் பிரவேசிப்பதால் ஞாயிற்றுக்கிழமை முக்கியத்துவம் பெறுகின்றது.

**திதிகள்**

| | | |
|---|---|---|
| பிரதமை | ஷஷ்டி | ஏகாதசி |
| துதியை | ஸப்தமி | துவாதசி |
| திரிதியை | அஷ்டமி | திரயோதசி |
| சதுர்த்தி | நவமி | சதுர்த்தசி |
| பஞ்சமி | தசமி | 15 பூரணை |
| | | 30 அமாவாசை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்டாதி -

**நவராத்திரி விரதம்**

புரட்டாதி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல், நவமி முடிய வரும் ஒன்பது நாளும் கும்பத்திலே பூசைசெய்து தேவியை அனுட்டிக்கும் விரதமாம். இதில் வரும் அட்டமிக்கு மகா அட்டமி என்றும் நவமிக்கு மகா நவமி என்றும் பெயர். இதனால் இதை மகாநோன்பு அல்லது மகர்நோன்பு என்று சொல்லிக் கொண்டாடுவர். இது தேவி உபாசகர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் விரதமாகும். இந்த ஒன்பது இரவுகளிலும் முதல் மூன்று நாட்களிலும் வீரத்தை வேண்டித் துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்களிலும் செல்வத்தை வேண்டித் திருமகளையும் இறுதி மூன்று நாட்களும் கல்வியை வேண்டிக் கலைமகளையும் நினைத்து பூசித்து விரதம் அனுட்டிப்பர். நோன்பு நோற்பவர்கள் பிரதமையில் எண்ணெய் முழுக்காடி நோன்பைத் தொடங்க வேண்டும். இவ்விரதம் அனுட்டிப்போர் முதல் எட்டுநாளும் ஒரு போது உணவு உட்கொண்டு, ஒன்பதாவது நாளான மகாநவமியில் உபவாசம் இருத்தல் உத்தமம். இந்நோன்பு நாட்களில் அபிராமி அந்தாதி. குமரகுருபரனின் சகலகலா வல்லிமாலை போன்ற பாடல்கள் பாராயணம் செய்யத்தக்கன.

| நாள் | இராகம் | பிரசாதம் | பழம் | புஷ்பம் | பத்திரம் |
|---|---|---|---|---|---|
| 1வது | தோடி | வெண்பொங்கல் சுண்டல் | வாழை | மல்லிகை | வில்வம் |
| 2வது | கல்யாணி | புளியோதரை | மா | முல்லை | துளசி |
| 3வது | காம்போதி | சர்க்கரைப் பொங்கல் | பலா | சம்பங்கி | மரு |
| 4வது | பைரவி | கறிச்சாதம் பொரியல் | கொய்யா | ஜாதிமல்லிகை | கதிர்ப்பச்சை |
| 5வது | பந்துவராளி | தயிர்ச்சாதம் | மாதுளை | பவளமல்லி | விபூதிப்பச்சை |
| 6வது | நீலாம்பரி | தேங்காய்ச்சாத் | நாரத்தை | செம்பருத்தி | சந்தன இலை |
| 7வது | பிலகரி | எலுமிச்சம்பழம் | பேரீந்து | தாழம்பூ | தும்பை இலை |
| 8வது | புன்னாக வராளி | பாயசம் முறுக்கு | திராட்சை | ரோஜா | பன்னீர் இலை |
| 9வது | வசந்தா | திரட்டுப்பால் | நாவல் | தாமரை | மருக் கொழுந்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்டாதி சனி

பொதுவாகச் சனிக்கிழமை சனீஸ்வர வழிபாட்டிற்கான நாளாக இருந்த போதிலும் புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் அனுட்டிக்கப்படும் விரதமும் வழிபாடும் மேலான பலனைத் தர வல்லனவாகையால் இத்தினம் சனீஸ்வர வழிபாட்டிற்குச் சிறப்பான நாளாகும். இத்தினத்தில் கறுப்பு எள்பொட்டளமாக கட்டி மண்சிட்டியில் வைத்து நல்லெண்ணெய் விட்டு எரித்து வழிபடுவார்கள்.

## கேதார கௌரி விரதம்

இவ்விரதம் புரட்டாதி மாத வளர்பிறை அட்டமி அல்லது நவமி அல்லது தசமித் திதியில் ஆரம்பமாகி ஐப்பசி மாதத் தேய்பிறை சதுர்த்தசியில் (14ம் நாள்) முடிவுறுகின்றது. இருபத்தொரு நாட்களைக் கொண்ட மஹோன்னத விரதம் இதுவாகும். உமாதேவியார் சிவ பெருமானை நோக்கி சிவபூசை செய்து அர்த்த நாரீஸ்வரப் பேற்றினைப் பெற்ற விரதமாகையால் இது கேதார கௌரி விரதம் என்று சொல்லப்படுகின்றது. மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்கலமாக இருக்க வேண்டும் என்றும், மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை வேண்டியும் இதனை அனுஷ்டிப்பர்.

மங்களகரமான வாழ்க்கையை வேண்டி ஆண்களும் இந்த விரதத்தை அனுட்டிப்பதுண்டு. விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சுக்களாக இடப்பட்டு இறுதி நாளன்று அந்த நூலை கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும், பெண்கள் தமது இடதுகையிலும் அணிந்து கொள்வர்.

## மகாளயம்

மகாளய பட்சம் புரட்டாதி அமாவாசையன்று முடிவடையும். அதற்கு முந்திய பதினைந்து நாட்களாகும். இது பிதிர்களை நினைத்து அவர்களுக்குச் செய்யப்படும் தானமாகும். பிதிர்களை நினைத்து மாதந்தோறும் தானம் செய்ய முடியாதவர்களை இந்தக் காலத்தில் தானங்களைச் செய்வதால் பன்னிரண்டு மாதங்களிலும் செய்த பலனைக் கொடுப்பதாகும். மகா + ளயம் - பிதிர்கள் பூமிக்கு வரும் நாள் இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்டாதி பூர்வ பக்க சதுர்த்தசி

**(புரட்டாதி மாதம் வளர்பிறை 14ம் நாள்)**

நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகங்களில் இத்தினத்தில் நடைபெறும் அபிஷேகமும் ஒன்றாகும். இத்தினம் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும்.

## ஐப்பசி -

## வெள்ளிக்கிழமை விரதம்

சுக்கிரவாரம் என்றால் வெள்ளிக்கிழமை என்பது பொருள். வெள்ளிக்கிழமை விரதமாவது ஐப்பசி மாதத்து முதலாவது வெள்ளிக்கிழமை தொடங்கி வெள்ளிக்கிழமை தோறுஞ் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாகும். இவ்விரத நாளில் உபவாசமிருத்தல் உத்தமம். அதற்கு இயலாதவர்கள் இரவிலே பழம் முதலியன உட்கொள்ளலாம். இதற்கும் இயலாதோர் ஒருபொழுது பகலில் உணவு கொள்ளலாம். இவ்விரதம் மூன்று ஆண்டுகளுக்கேனும் அனுட்டித்தல் வேண்டும். இவ்விரதத்தை நிறைவு செய்யும்போது விரதமிருக்குஞ் சாந்திக் கிரியைகளுடன் முடித்தல் வேண்டும். இககிரியை ''உத்தியாபனம்'' எனக் கூறப்படும். விரத பலனை அடையும் பொருட்டுச் செய்யும் கிரியை இதுவாகும். ஐப்பசி மாதத்துக் கடைசி வெள்ளிக்கிழமை உத்தியாபனஞ் செய்து கொள்ளுதற்கு உகந்தநாள் ஆகும். மேலும் அம்பிகைக்கும், விநாயகருக்கும் உரிய நாளாகவும் கொள்ளப்படுகிறது.

## கந்தசட்டி விரதம்

ஐப்பசி மாதம் அமாவாசைக்கு அடுத்த பிரதமை முதற் சட்டி ஈறாகிய ஆறு நாளும் அனுட்டிக்கும் விரதம் இதுவாகும். ஒவ்வொரு நாளும் காலையில் நீராடி முருகப் பெருமானை வழிபட்டு, சிறிதளவு நீர் மட்டும் அருந்தி உபவாசம் ஆறு நாளும் இருந்து. ஏழாம் நாள் சிவநடியார்களுடன் பாரணை செய்வது இவ்விரதத்திற்கு நியாயமாகும். இதற்கு இயலாதவர் முதலைந்து நாளும் ஒரு பொழுது உண்டு. சட்டியில் உபவாசஞ் செய்யக் கடவர். இவ்விரதம் ஆறு ஆண்டுகள் அனுட்டித்தல் வேண்டும்.

பிரதமையில் சிவபெருமானது நெற்றியிலிருந்து தெறித்த பொறிகள் ஆறும் சரவணப் பொய்கையில் ஆறுருவாக. அதனை உமாதேவியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்க ஆறுதிருமுகமும், பன்னிரண்டு திருக்கையுமுடைய ஒருருவாய் எழுந்தருளிய நாள் இக்கந்த சட்டி நாளாகும். சூரபதுமனை முருகன் சங்காரஞ் செய்த நாளும் இதுவேயாம். கந்தபுராண உபதேச காண்டத்தில் இவ்விரதம் பற்றிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தேவர்கள் இவ்விரதத்தை நோற்றுப் பயன் பெற்றதாகவும் இந்நூல் கூறும்.

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டு மாகி நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தில்
வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந்தருளி னானே.

## கார்த்திகை -

### திருக்கார்த்திகை விளக்கீடு

முன்னொரு காலத்தில் தேவர்கள் சிவபிரானை வேண்டித் தவம் செய்து பலவகையான வரங்களைப் பெற்றனர். பின் ஆணவமல மமதையால் இறைவனை மதியாது மயக்குற்றனர். அப்பொழுது சிவபிரான் அவர்கள் முன் ஒரு கிழவனாகக் காட்சியளித்து ஒரு தும்பை ஓர் இடத்தில் நட்டுவிட்டு இதை யாராவது பிடுங்குங்கள் என்று கூறினார். ஒருவராலும் அதைப்பிடுங்க முடியவில்லை. ஆணவ மமதை அடங்கிக் கிழவனைப் பார்த்தனர். அப்பொழுது அவர் சோதிவடிவாய் நின்றனர். அன்றைய தினம் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரம் கூடிய பௌர்ணமி நாளாகும். இத்தினமே விளக்கீடு எனக் கொண்டாடப்படுகின்றது.

### விநாயக சட்டி விரதம்

இவ்விரதம் கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரம் கழிந்த மறுநாள் ஆரம்பித்து 21 வது நாளாகிய சதய நட்சத்திரமும் சட்டித்திதியும் கூடிய நாளில் நிறைவு பெறுவதாகும். இது விநாயக விரதங்களில் மிகச் சிறப்பான விரதமாகும். இந்நாள் தான் விநாயகப் பெருமான் கஜமுகாசுரனைச் சம்சாரம் செய்த நாளுமாகும். இதில் காப்புக் கட்டுதல் முக்கிய நிகழ்வாகும். இவ்விரதத்தில் விநாயகர் அகவல், விநாயக புராணம் என்பன படிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்த்திகை விரதம்

கார்த்திகை மாசத்துக் கார்த்திகை நட்சத்திரம் முதலாகத் தொடங்கி, மாசந்தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து நோற்கும் விரதம் கார்த்திகை விரதமாகும். கிருத்திகை எனவும் இது கூறப்படும்.

கார்த்திகை நட்சத்திரத்திற்கு முதல் நாளாகிய பரணியில் ஆசாரமாக இருந்து, ஒரு போது உண்டு, மறுநாள் (கார்த்திகை நாள்) முருகனை முறைப்படி பூசைசெய்து வழிபாடாற்றி உபவாசமிருந்து, அடுத்த நாளாகிய ரோகிணியில் பாரனை செய்தல் உத்தமம், இது கைகூடாதவர் பழம் முதலியன இரவில் உள்கொள்ள வேண்டும். இவ்விரதம் பன்னிரண்டு வருடங்கள் அனுட்டித்தல் வேண்டும். அரிச்சந்திரன், அந்திமான், சந்திமான் ஆகியோர் இவ்விரதத்தை அனுட்டித்தச் சித்திகள் அடைந்ததாக வரலாறு கூறுகின்றது. (அந்திமான் சந்திமான் இடையேழு வள்ளல்கள்)

## சோமவாரம்

சிவ விரதங்களுள் சோமவார விரதம் மிக மேலானதாகும். சந்திரனுக்குரிய தினம் திங்கள். எனவே திங்கட்கிழமை சொமவாரம் என அழைக்கப்படுகிறது. கிருயுகம் தோன்றியதும் சந்திரன் சிவபெருமானின் முடியில் அமரும் பேற்றினைப் பெற்றதும் கார்த்திகை சோம வாரத்திலே தான். எனவே இம்மாதத்து திங்கட்கிழமை முக்கியத்துவம் பெறுகின்றது. கார்த்திகை மாதத்தில் திங்கட்கிழமைகளில் பகல் முழுவதும் உபவாசமிருந்து சிவபெருமானைச் சிந்தித்து வழிபாட்டில் ஈடுபட்டு இரவுமட்டும் ஒருவேளை உணவு உண்ணல் வேண்டும்.

## மார்கழி -

## திருவெம்பாவை

மாதங்களில் சிறந்தது மார்கழி மாதமாகும். மாதங்களில் நான் மார்கழி என்று கிருஷ்ண பகவான் கீதோபதேசத்தில் கூறுவதிலிருந்து இதன் மகிமையை அறியலாம். மேலும் மார்கழி தேவர்களுக்கு விடியற்காலம். எனவே இறைவனை நினைத்து திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை ஆகியன பாடுவதற்கு மார்கழி உகந்த மாதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி திருவாதிரை நட்சத்திரத்திற்கு முந்திய ஒன்பது தினங்களும் திருவெம்பாவை உற்சவ காலங்களாகும். திருவாதிரை நட்சத்திர தினத்தன்று திருவெம்பாவை நிறைவு பெறுகின்றது. திருவெம்பாவை, நடராஜப் பெருமானுக்கு உரித்தான உற்சவம்.

மேலும் மார்கழியில் நிகழும் விழா இறைவனின் ஐந்தொழில்களில் அனுக்கிரகத்தைக் குறிப்பதாகையால் இவ்விழா எல்லா விழாக்களிலும் சிறப்புடையதாகும். மார்கழி திருவாதிரையில் நடைபெறும் நடேசர் அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆருத்திரா தரிசனமும் ஆன்ம ஈடேற்றத்துக்கு இன்றியமையாதனவாகும்.

## திருவாதிரை

மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய நன்நாளில் அனுட்டிப்பது திருவாதிரை விரதம். இந்த விரதம் சிவபெருமானுக்கு மிகவும் உகந்தது. இதனையொட்டியே சிவ பெருமானை ஆதிரையின் முதல்வன் என்றும், ஆதிரையான் என்றும் கூறுவர். மார்கழித் திங்கள் திருவாதிரை நாளன்று நடராசருக்குச் சிறப்புக்கள் நடைபெறும். அவற்றுள் சிதம்பரத்தில் நடப்பது மிகுந்த சிறப்புடையது. இவ்விரதம் சிதம்பரத்திலிருந்து அனுட்டிப்பது உத்தமோத்தமம். அங்கு ஆருத்ரா தரிசனம் செய்வதற்காக அநேகர் செல்வர். ஆருத்ரா என்பது ஆதிரையைக் குறிக்கும் சொல். இவ்விரதத்தில் உபவாசம் இருத்தல் மேலாம்.

சங்சரங்கிதை என்னும் வடமொழி நூலின் உபதேச காண்டத்தில் இவ்விரதமகிமை கூறப்பட்டுள்ளது. கச்சியப்பசிவாசாரியாருடைய மாணக் கராகிய கோனேரியப்ப முதலியார் தமிழில் இதனை மொழி பெயர்த்துள்ளார்.

## தை -

## தைப்பூசம்

தை மாதம் பூரணையுடன் சேர்ந்து வரும் நட்சத்திர தினம் முருக வழிபாட்டிற்குச் சிறந்த நாளாகும். இத்தினத்தில் பலர் பாற்குடம் காவடி முதலியன எடுத்து முருகனை வழிபடுவார்கள்.

## தை அமாவாசை

இத்தினத்தில் தான் அபிராமிப்பட்டரின் பிரார்த்தனையின் நிமித்தம் அம்பிகையின் அருளால் பூரணை தினமாகக் காட்சியளித்தது. இந்நூலில் அபிராமி அந்தாதி படித்துத் தேவியை வழிபடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாசி -

## மகா சிவராத்திரி

இராத்திரி என்பது இருட்காலம் என்பதை யாவரும் அறிந்தது. எனினும் உண்மையான இருட்காலம். இறைவன் உலகம் முழுவதையும் ஒடுக்கி நிற்கும் காலம். இதனை ''சர்வசங்கரா காலம்'', ''பிரளயகாலம்'', ''ஊழிமுடிவு'' என்று பலவாறாகக் கூறுவர். இரவில் ஒளியின்றி உயிர்களின் நடமாட்டமில்லாது எங்கும் அமைதி நிலவுவது போல், இந்த ஊழி ஒடுக்ககாலத்தில் பஞ்ச பூதங்களும், தநுகரண, புவண, போகங்களும் ஒன்றுமேயில்லாது உயிர்கள் செயலற்றுக் கிடப்பனவாம். ஆகவே அப்பொழுது அமைதியே நிலவும். இந்தப் பேரிருளில் தனித்து நிற்பவன் சிவபெருமான் ஒருவனேயாம். நாம் நாள்தோறும் காண்கின்ற இரவு அனைத்துயிர்க்கும் உரிய சாதாரண இராக்காலம். ஆயின் உலக ஒடக்க நிலையாகிய இரவு சிவனுக்கே உரிய சாதாரண இராக்காலமாகும். இதனாற்றான் இவ்விரவு ''சிவராத்திரி எனப்பெயர் பெற்றுள்ளது.

ஒடுங்கிய உலகத்தை மீளத் தோற்றுவித்தற்காக இறைவன் சோதிவடிவான இலிங்கமாய் நின்று ''இலளிதாதேவி'' என்னும் பெயரோடு சத்தியைத் தோற்றுவிக்க, அத்தேவி இலிங்கபிரானை வணங்க, அவர் இலிங்கோற்பவராகத் தோன்றி உலகின் மறு தோற்றத்தின் பொருட்டுப் பிரம்மா முதலியோரைப் படைத்துச் சிருட்டித் தொழிலை ஆரம்பிப்பார். இதனையே மாசி மாதத்துச் சதுர்த்தசித் திதியில் வரும் இரவும், அன்று இரவு மூன்றாம் சாமம் நடைபெறு இலிங்கோற்பவ பூசையும் எடுத்துக் காட்டுகின்றன. சிவனிடத்தில் அன்பு பூண்டொழுகுவோர்க்கு அன்றைய நாள் சிறந்த நோன்பு நாளாகும்.

**விரதமுறை:** சைவ சமயிகள் யாவராலும் அனுட்டிக்கப்பட வேண்டிய விரதம் சிவராத்திரி விரதமாகும். மாசிமாதத்துத் தேய்பிறைச் சதுர்தசித் திதியில் சிவபெருமானைக்குறித்து அனுட்டிப்பது சிவராத்திரி விரதம். இந்நாளில் உபவாசம் இருப்பதோடு இரவு முழுவதையும் நித்திரையின்றிச் சிவ பூசையிலும், சிவ வழிபாட்டிலும் செலவு செய்தல் வேண்டும். இரவில் நான்கு சாமப் பூசைகளும் அவ்வக்காலங்களில் செய்தல் உத்தமம். இன்றேல் ஒரு காலத்திற் சேர்த்தேனும் செய்தல் வேண்டும். இது மத்திமம் ஆகும். நான்கு சாமமும் பூசை செய்வோர் முதற் சாமத்திற் பாலாலும், இரண்டாம் சாமத்திற் தயிராலும், மூன்றாம் சாமத்தில் நெய்யாலும், நான்காம் சாமத்தில் தேனாலும் பெருமானுக்கு அபிஷேகம் செய்யக்கடவர். நான்கு சாமப் பூசைகளிலும் வில்வத்தால் அர்ச்சிப்பது மேலான பலனைக் கொடுக்கும். இக்காலங்களில் விநாயகருக்கும், சண்டேசுவரருக்கும் பூசை செய்தல் வேண்டும். சிவபூசை இல்லாதோர் நான்கு சாமமும் சிவாலய தரிசனம் செய்வதோடு, பஞ்சாட்சர செபம், சிவபுராணம் படித்தல், கேட்டல் முதலியவற்றில் இரவைக் கழித்தல் வேண்டும். உபவாசம் இருக்க இயலாதோர் நீரேனும் பாலேனும் உண்டு கொள்ளலாம். இரவு முழுவதும் இந்நாளில் நித்திரை விழிக்க முடியாதவர் பதினாலாவது நாழிகையில் வரும் இலிங்கோற்பவகாலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையிலாயினும் நித்திரை ஒழித்தல் வேண்டும். இவ்இலிங்கோற்பவகாலத்தில் செய்யும் தரிசனமும் பூசையும் பெரும் பலன் நிறைந்தன. இறைவனின் திருவுளம் பற்றிய காலம் இதுவாகும்.

உபவாசம் மேற்கொண்டோர் அடுத்தநாட் காலையிலேயே நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு சூரியோதயத்தின் முன் அறு நாழிகைக்குள்ளே சிவனடியாரோடு பாரணம்பண்ணல் வேண்டும். பாரணம் பண்ணிய பின் பகலிலே நித்திரை செய்யக் கூடாது. (பாரணம் உபவாசத்திற்குப் பின் உட்கொள்ளும் உணவு)

சிவராத்திரி விரத பலன் பாவநீக்கமும், உலகம் எல்லா நலன்களும் பெற்றுச் செழித்தலுமே.

## சிவராத்திரியின் வகைகள்

1. மகா சிவராத்திரி
2. யோக சிவராத்திரி
3. நித்திய சிவராத்திரி
4. மாத சிவராத்திரி
5. பட்ச சிவராத்திரி என ஐந்து வகைப்படும்.

## சிவராத்திரியில் நான்கு சாமப் பூசை விதிமுறைகள்

| சாமம் | மலர் | பத்திரம் |
|---|---|---|
| 1- ஆவது | தாமரை, அலரி | வில்வம் |
| 2- ஆவது | சண்பகம், தாமரை | துளசி, வில்வம் |
| 3- ஆவது | செங்கழுநீர்,அத்தி,பிச்சி | முட்கிழுவை, வில்வம், அறுகு |
| 4- ஆவது | நந்தியாவர்த்தம் | விளா |

| சாமம் | பழம் | தூபம் | ஓதும் வேதம் |
|---|---|---|---|
| 1- ஆவது | வில்வம் | சாம்பிராணி | இருக்கு |
| 2- ஆவது | பலா | சந்தனக்கட்டை | யசுர் |
| 3- ஆவது | மாதுளம் | குங்குலியம் | சாமம் |
| 4- ஆவது | நானாவிதபழங்கள் | கர்ப்பூரம் | அதர்வம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதோஷ விரதம்

ஒவ்வொரு மாதமும் வரும் வளர்பிறை தேய்பிறை எனும் இரண்டிலும் 13ம் திதியாகிய திரயோதசித் திதியில் சூரிய அத்தமனத்திற்கு முன் ஒன்றரை மணிநேரமும் பின் ஒன்றரை மணிநேரமும் உள்ள காலம் (மாலை 4.30 - 6.00) பிரதோஷ காலம் எனப்படும். இக்காலத்தில் சிவபெருமானைக் குறித்து இவ்விரதம் அனுட்டிக்கப்படும். ஐப்பசி, கார்த்திகை, சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களில் ஒன்றில் வரும் சனிப்பிரதோஷத்தில் தொடங்கி இவ்விரதத்தை அனுட்டிக்கத் தொடங்கலாம். பகலில் உணவை விடுத்து, பிரதோஷ காலம் தொடங்குவதற்கு முன்பே நீராடி, சிவபூசை முடித்துச் சிவாலய தரிசனம் செய்து, பிரதோஷகாலம் கழிந்தபின் சிவனடியாரோடு உணவு கொள்ளல் வேண்டும். பிரதோஷ காலத்தில் சிவாலயத்தை வலம் வந்து இடபதேவரையும் சண்டேசுவரரையும் கும்பிடுவதற்கு விசேடமுறை உண்டு. பிருதிவியிலுள்ள தீர்த்தங்களெல்லாம் பிரதோஷ வேளையில் சிவதரிசனத்தின் பொருட்டு நந்திதேவரை வந்தடைவதாகப் புராணங்கள் கூறுவதனால், இந்நேரத்தில் நந்திதேவரது இரண்டு கொம்புகளுக்கும் இடையால் சிவதரிசனஞ் செய்தல் மிகவும் உத்தமமென அருள் நூல்கள் கூறுகின்றன. காப்பரிசி நிவேதனம் செய்வது சிறப்பைத் தரும். அதையே விரத உணவாகவும் உண்ணலாம்.

இறைவன் தீர்த்தங்களின் வடிவாய் இருந்து உயிர்களது வினையைப் போக்கி, அவைகட்கு நலஞ் செய்பவன். அப்படியான தீர்த்தங்கள் நந்தி தேவரிடம் பிரதோஷ வேளையில் வந்திருக்கும்போது அவருக்கூடாகச் சிவ தரிசனஞ் செய்பவர்கள் அத்தீர்த்தத்தில் நீராடிச் சிவ தரிசனஞ் செய்பவர்களாகின்றனர். இத்தீர்த்தத்தைத் தாண்டி வழிபடுவோர், தாங்கள் செய்த பாவத்தைத் தீர்த்தத்தில் கழுவி உயிரைத் தூய்மை செய்து கொள்வர்.

பல இடங்களில், பல காலங்களில் சென்றாடிப் பயன்பெறுதற்குரிய புண்ணிய தீர்த்தங்களின் பலன்களை, ஓர் இடத்தில், ஒரு பொழுதில் எல்லோரும் மானசீகமாக ஆடிப் பெறுதற்பொருட்டு, பிரதோஷப் பொழுதில் புண்ணிய வடிவான நந்தியம் பெருமானடியில் ஒன்று திரண்டுவர வைத்திருப்பது இறைவனது பேரருட் கருணைக்கோர் எடுத்துக்காட்டாகும். இப்படியான சிறந்த விரதத்தை விதிப்படி நோற்போர் மேன்மையான சித்திகளை எய்துவர். பிரதோஷகாலத்தில் செய்யும் ஆலய பிரதட்சணத்தைச் சோமசூத்திரப் பிரதட்சணம் என்பர்.

உணவு உண்டல், உறங்கல், எண்ணெய் தேய்த்தல், நீராடல், நூல்களைப் படித்தல் முலியன பிரதோஷ காலத்தில் தவிர்க்கப்படல் வேண்டும்.

பிரதோஷ வித தரிசன பலன் கடன், வறுமை, நோய், பயம், பாவம்முதலானவற்றை நீக்கும்.

## சோம சூத்திரப் பிரதட்சண முறை

பிரதோஷ காலத்தில் (மாலை 4.30 முதல் 6.00 மணிவரை) சிவாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று தரிசிக்கும் போது வலம் வரும் முறைக்கு சோமசூத்திரப் பிரதட்சண முறை என்று பெயர், இதன் முறை,

முதலில் சிவனையும், நந்தியையும் வணங்கி இடமாக சண்டேஸ்வரரை வழிபட்டு அப்படியே திரும்பி வந்து முன்போல் சிவனையும், நந்தியையும் வணங்கி வழக்கம்போல ஆலயத்தை வலமாக வந்து சண்டேஸ்வரர் ஆலயம் வரை வழிபட்டு அப்படியே திரும்பி வந்து முன்போல் சிவனையும், நந்தியையும் வணங்கவேண்டும். இவ்வாறு மூன்று முறை செய்ய வேண்டும். இதுவே சோமசூத்திரப் பிரதட்சண முறையாகும்.

**மாசி மகம்**

மாசி மாதம் மக நட்சத்திரம் கூடிய நாளான இத்தினம் நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகத் தினங்களில் ஒன்றாகையால் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும். அம்பிகை தாட்சாயணியாகத் தாமரை மலரில் அவதரித்த நாள் இதுவாகும்.

**மாசி மகம்**

மாசி மாதம் மக நட்சத்திரம் கூடிய நாளான இத்தினம் நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகத் தினங்களில் ஒன்றாகையால் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும். அம்பிகை தாட்சாணியாகத் தாமரை மலரில் அவதரித்த நாள் இதுவாகும்.

**பங்குனி -**

**பங்குனி உத்தரம் (கல்யாண சுந்தர விரதம்)**

உலக மாதாவாகிய உமாதேவியார் மலையரசன் மகளாக திருஅவதாரம் செய்து சிவபெருமானைத் திருமணம் செய்தது இத்தினமாகும். இத்தினம் விழா எடுப்பதற்கும் தரிசனத்துக்கும் சிறந்த நாளாகும். இவ்விரதத்திற்கு இரவில் பழமும் பாயாசமும் உண்பது நியதி. இயலாதவர்கள் நண்பகல் ஒருபொழுது உணவு உண்ணலாம்.

**பங்குனித் திங்கள்**


பங்குனித் திங்கள் அம்பிகை வழிபாட்டிற்குச் சிறந்த நாளாகும்.

**நன்றி: இந்து மக்களுக்கு**

**ஒரு கையேடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரோடா தத்துவம்

ஆல்ப்ரெட் பரேடோ (Alfred Pareto) என்ற இத்தாலிய நாட்டு பொருளாதார நிபுணர் உலகத்தில் பல்வேறு விகிதங்களில் பொருளாதாரத்தை ஆராய்ந்து ஒரு தத்துவத்தை விளக்கினார். அது பரோடா தத்துவம் என்றும் 80–20 தத்துவம் 80–20 (Principle) என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த தத்துவத்தின் படி, இந்த உலகத்தில் 20 சதவிகித மக்களிடம் தான் 80 சதவிகித பணமும் சொத்தும் உள்ளது என்பதை ஆல்ப் ரெட் பரேடோ நிருபித்துள்ளார். நம் வாழ்க்கைக்கும் இந்த தத்துவம் பொருந்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

உதாரணமாக 20 சதவிகித உழைப்பில்தான் 80 சதவிகித மக்கள் சாப்பிடுகின்றனர்.

20 சதவிகித மண்பரப்பில்தான் மொத்த விளைச்சலில் 80 சதவிகித விளைச்சல் கிடைக்கிறது.

20 சதவிகித தொழிற்சாலைகள்தான 80 சதவிகித சுற்றுச் சூழலைப் பாதிக்கின்றன.

80 சதவிகித மருத்துவச் செலவு 20 சதவிகித நோயாளிகளுக்கே ஆகிறது 20 சதவிகித பத்திரிகைகளைத்தான் 80 சதவிகித மக்கள் படிக்கிறார். (எவ்வளவு பொருத்தமாகச் சொல்லியிருக்கிறார் பாருங்கள்!)

பிரச்சனைகளைக் கண்டு மனம் நொந்து "இது எல்லாம் என் தலைவிதி" என்று புலம்பிப் புலம்பி வாழ்க்கையில் எதையும் சாதிக்காமல் மன உளைச்சல் மனவருத்தம் கொண்டு உடல் நலத்தையும் கெடுத்துக் கொண்டு எதற்காக வாழவேண்டும் என்று அவ்வப்பொழுது மனதிற்குள்ளேயே கேள்வி கேட்டுக் கொண்டிருப்பவர்கள் சுமார் 80 சதவிகிதம் பேர்.

உலகில் ஏற்படும் அதிவேக மாற்றத்திற்கேற்ப வரும் பிரச்சனைகளை எதிர்த்துப் போராடிக்கொண்டே "இதுதான் வாழ்க்கை" என்று எண்ணி மகிழ்ச்சியுடனும் நிம்மதியுடனும் இருப்பவர் சுமார் 20 சதவிகிதம் பேர்.

நீங்கள் 20 சதவிகிதத்தில் ஒருவராக இருக்க தீர்மானிப்பதும் 80 சதவிகிதத்தில் ஒருவராக இருக்க தீர்மானிப்பதும் உங்களிடத்தில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாட்டில் நாம்.....

| நவக்கிரகங்கள் | நிவேதனம் | தானியம் | நிறம் |
|---|---|---|---|
| சூரியன் | சர்க்கரைப்பொங்கல் | கோதுமை | சிவப்பு |
| சந்திரன் | பால்பாயாசம் | நெல் | வெள்ளை |
| செவ்வாய் | பொங்கல் | துவரை | சிவப்பு |
| புதன் | புளியோதரை | பயறு | பச்சை |
| வியாழன் | தயிர்சாதம் | கடலை | மஞ்சள் |
| வெள்ளி | நெய்ப்பொங்கல் | மொச்சை | வெள்ளை |
| சனி | எள்ளுச்சாதம் | எள் | கறுப்பு |
| ராகு | உழுந்துச்சாதம் | உழுந்து | நீலம் |
| கேது | சித்ரான்மை | கொள்ளு | பலவர்ணம் |

| கடவுள் | பூசைக்குரிய பூக்கள் |
|---|---|
| விநாயகர் | அறுகு, சண்பகம், பாதிரி, சூரியகாந்தி, வன்னி |
| சிவன் | கொன்றை, வில்வம், தும்பை, சங்குப்பூ, செம்பருத்தி |
| விஷ்ணு | துளசி, மாதவி, குருத்து, வாகை, மத்யாணி, கருங்கால் கொன்றை, முருக்கு, அலரி, செம்பரத்தை, நெச்திலகம், மருக்கொழுந்து. |
| பிரமன் | அலரி |
| முருகன் | வெட்சி, கடம்பு. முல்லை, குறிஞ்சி, மல்லிகை, காந்தள் |
| சூரியன் | தாமரை |
| உமா | நீலோத்பலம், தாமரை, சூரியகாந்தி, செம்பவளமல்லி, நந்தியாவர்த்தை. |
| இலக்குமி | நெய்தல், செந்தாமரை |
| வரலட்சுமி | ஐந்துமடல் கொண்ட தாழம்பூ |
| துர்க்கை | செவ்வேருக்கு சிவப்பு, அரலி, கொன்றைமலர். |
| அக்னி | வள்ளி |

| நவக்கிரகங்கள் | பூசைக்குரிய பூக்கள் |
|---|---|
| சூரியன் | செந்தாமரை |
| செவ்வாய் | செண்பகம் |
| வியாழன் | முல்லை |
| சனி | கருங்குவளை |
| கேது | செவ்வல்லி |
| சந்திரன் | வெள்ளரலி |
| புதன் | வெண்காந்தள் |
| வெள்ளி | வெண்தாமரை |
| ராகு | மந்தாரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வம்சாவ

அமரர். தாமோதரம்

தாமோதரம்பிள்ளை + பகவதிப்பிள்ளை
(தந்தை) (தாய்)

பவானி அம்மா
+
செல்லத்துரை

**(அமரர்)**
**விஜயநாதன்**
+
**லிங்கேஸ்வரி**

விஜயராணி
+
முருகையா

விஜயலக்சுமி
+
இந்திரகுமாரன்

விமலநாதன்
+
கௌரி மனோகரி

வி
விே

வனிதா
வசந்தா
வரதராஜன்
வகிந்தராஜன்
வசந்தாராஜன்

சகுந்தலை
கௌசலை
கௌமாரன்
விசாகேசன்
தியாகேசன்

இந்திரப்பிரகாஷ்
ஹம்சா நந்தினி
ஜனார்த்

காயத்திரி
திரியம்பகன்
சாவித்திரி

லிங்கே
+
(அம
விஜயர

கௌரிதரன்
+
வாசுகி

சதுவர்த்தன்
தனுவர்த்தன்

ஹேமாங்கதன்
(அமரர்)

விஜயகுமார்
+
கலைவாணி

ஹிரிஷ்சாயி
கீர்த்திக்

மோகனப்பிரியா
+
ஜீவராஜ்

அபர்ணா
அபரதன்
அபர்நயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி

மோதரம்பிள்ளை விஜயநாதன்

கனகசுந்தரம் + மனோன்மணி
(மாமன்) (மாமி)

ன்

விஜயசௌந்தரி
+
விவேகானந்தமூர்த்தி

விஜயேஸ்வரி
+
பாலச்சந்திரன்

நர்மதா
பகீரதி
மயூரப்பிரியன்
அஜ்ஜுதன்

கரி

ரி
கன்
ரி

லிங்கேஸ்வரி
+
(அமரர்)
விஜயநர்தன்

அகிலாண்டேஸ்வரி
+
யூகரெட்ணம்

இந்திரகுமார்
புஸ்பலதா
சிவகுமார்
சந்தானலக்சுமி
கௌரிகுமார்

பிரேமச்சந்திரன்
+
இந்திராணி

அசோக்
மதன்
அஜித்தா

சரவணபவானந்தன்
+
பத்மாவதி

சத்தியவதனா
ஹரிசாந்தன்
தஸ்சியந்தி

இலங்கேஸ்வரன்
+
பிரேமலதா

ரிஷீஷ்காந்
துக்ஷீஷ்காந்
அகல்யாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி

'அப்பா' நோயுற்று இருந்தவேளை

தேடிவந்து பார்த்து ஆறுதல் தந்தவர், அவர் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து தாமாகவே கடமைகள் புரிந்து எம் தோளோடு தோளாக நின்றவர், எம்மை தேற்றி கவலைதனை போக்கியவர், உற்றவர், உறவினர், நண்பர்கள், மலர்வளையம் வைத்தவர், தொலைபேசியில் மனமுருகியவர், மலர்மாலை சாத்தியவர், சிகிச்சையளித்து மனதில் இடம்பிடித்த மருத்துவர்கள் இந்நினைவிதழை தொகுத்து தந்த "திருமலை சுந்தா", அச்சுப்படுத்திய அஸ்ரா நிறுவனத்தினர், இன்றைய நினைவு நாளில் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தித்தவர் அனைவருக்கும் நன்றி.

19, சமாது ஒழுங்கை
திருக்கோணமலை

குடும்பத்தினர்
01-06-2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி

'அப்பா'வையிழந்து இருக்கையிலே

தேடிவந்து பரிவுடன் ஆறுதல் தந்தவர், அவர் சிவபதமடைந்த

செய்தி கேட்டு ஓடோடி வந்து தாமாகவே கடமைகள் புரிந்து

எம் தோளோடு தோளாக

நின்றவர், எம்மை தேற்றி கவலைதனை போக்கியவர்,

உற்றார், உறவினர், நண்பர்கள், மலர்வளையம்

வைத்தவர், தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்தவர், மலர்மாலை

சாத்தியவர், சிகிச்சையளித்து மனிதநேயம் காட்டிய

மருத்துவர்கள், இம்மலரை சிறப்புற தொகுத்து தந்த

"திருமலை சுந்தா", அச்சிட்டுத் தந்த அச்சக

நிறுவனத்தினர், இன்றைய நினைவு நாளில் ஆத்ம சாந்தி

வேண்டி பிரார்த்தித்தவர் அனைவருக்கும் நன்றி.

19, சமாது ஒழுங்கை
திருக்கோணமலை

குடும்பத்தினர்
01-06-2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org